திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரைப் பொக்கிஷம்

304

விஜய - மாசி - பங்குனி ★ மார்ச்சு 1954

APR 1954 MADRAS

இந்த இதழில்

★ ஆங்கிலம் என்றும் தேவைதான்

★ விசித்திர சிருஷ்டிகள்

★ அமெரிக்காவில் ஒரு சுக்கிரலோக மனிதன்

★ கலியுக மகரிஷி

இன்னும்

பல அரசியல், சமூக, விஞ்ஞான ஆராய்ச்சிக் கட்டுரைகள், கதைகள்.

விலை 8 அணா

பொருளடக்கம்

57 அடி உயர சிலை 1

நடனமாதர்களால் கெட்டார்கள் நம்நாட்டு மன்னர்கள் 7

இரு குதிரைகள் 11

பண்டிகைகளால் கலைகள் அபிவிருத்தியடைகின்றன 12

உங்களுக்குத் தெரியுமா ? 16

பூமாதேவியின் கோர தாண்டவம் 17

கலிங்கத்தின் வரலாறு 20

பட்டாடையின் உதயம் 25

இவள் யார் ? 34

நித்திரையிலும் தற்கொலை செய்து கொள்ளலாம் 35

சிவனின் சுவீகார புத்திரன் 38

வைரம் நிறைந்த நதிக்கரை 42

திக்குவாய் தீராத நோய் 45

ஹிந்து ஆலயத்தில் முஸ்லீம் பூஜாரி 47

சிறைச்சாலையை சீர்திருத்தசாலையாக்கலாம் 49

யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, சென்னை-1.

"THIRATTU" Tamil Monthly Digest. Vol. 1. No. 4.

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரை பொக்கிஷம்

மார்ச்சு 1954

26 APR 1954

பிரம்மாண்டமான தோற்றம் பாற் கடல் போன்ற அழகு: மரகதம் போன்ற பசுமை, நம் கண் எதிரில் தெரியும் கடவுள்!

57 அடி உயர சிலை

●

ஜைனர்களின் நூற்றுக்கணக்கான புனிதஸ்தலங்களில் முக்கியத்துவம் வாய்ந்தது மைசூரைச் சேர்ந்த சரவணபெலகோலா ஆகும்.

சரவணபெல கோலா இடத்தின் அமைப்பே மிகவும் அழகானது. இங்கு தான் தென்னிந்தியாவின் தலைசிறந்த சிற்பிகளின் ஒப்பற்ற வேலைப்பாடமைந்த கோமதேஸ்வரரின் பிரம்மாண்டமான சிலை இருக்கிறது.

இச்சிலை இருக்கும் பிரதேசத்தில் வெகு தூரத்திற்கப்பால்கூட இது கண்ணுக்குத் தெரியும். விந்தியாகிரி என்ற குன்றின்மீது இந்த சிலை எழுப்பப்பட்டிருககிறது. 1028-ம் வருஷத்தில் இந்த 57 அடி உயரமுள்ள பிரம்மாண்ட சிலையை ஒருசிற்பி நிர்மாணித்திருக்கிறார். விந்தியாகிரி என்பது ஒரேபாறை. சிலைக்கு நாலுபக்கங்களிலும் ஒரு பெரிய சுவர் உள்ளது. ஆனாலும் பல மைல்களுக்கப்பாலும் இச்சிலை கண்ணுக்குத் தெரியும்,

சாம்பல் வர்ணம்கொண்ட கல்லில் செதுக்கப்பட்ட பிரம்மாண்டசிலையின் அங்கங்கள் மிகவும் லக்ஷணமானவை. கால்கள் தான் சிறிது குறுகலாயிருக்கும். திகம்பர இனத்து சந்நியாசிகளைப் போலவே நிர்வாணக் கோலத்தில் தான் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

பிரம்மாண்டமான இச்சிலை அபாரமான அழகும் அமைப்பும் கொண்டது. முகத்தில் சாந்தம் தவழுகிறது; உதட்டிலே புன்னகை. மனிதர்களையும் அவர்கள் குற்றங்குறைகளையும் கண்டுதான் இந்த நகைபோலும்!

பத்து நூற்றாண்டுகளாக இருக்கும் இந்த சிலைக்கு வெயிலினாலோ, மழையினாலோ சிறிதும் பழுது ஏற்படவில்லை. ஜைனசிற்பி இந்த அழகான சிலையை முடித்ததினத்தன்று எவ்வளவு பளபளப்புடனிருந்ததோ அதே பளபளப்புடன் இன்றும் விளங்குகிறது.

புராணங்களில் பகவான் பக்தர்களுக்கு விசுவரூப தரிசனம் அளிப்பதாய்க் கேள்விப்படுகிறோம். கோமதேஸ்வரர் சிலையைகாண்பது நமக்கு விசுவரூப தரிசனத்தைக் காண்பதுபோல பிரமை ஏற்படுகிறது.

கோமதேஸ்வரரைப் பற்றியும் ஒரு கதையுண்டு. இவர் பவுதர்ன புரத்து ராஜாவான புருதேவரின் குமாரராய்ப் பிறந்தவர். இவருடைய சிறிய தாயாரின் புதல்வரான பரதனுக்கும் இவருக்கும் ராஜ்யத்திற்காக கோர யுத்தம் நடந்தது. கோமதேஸ்வரர் யுத்தத்தில் பரதனைத் தோற்கடித்தார்.

தோற்கடித்ததும் கோமதேஸ்வரருக்கு ஞானோதயம் ஏற்பட்டது! கையில் கமண்டலம் ஏந்தி ராஜ்யத்தைத் துறந்து பிக்ஷுவாகக் கிளம்பிவிட்டார்.

பரதன் தனது நன்றியைக் காண்பிப்பதற்கு அடையாளமாய் கோமதெஸ்வரருக்கு பூராவும் பொன்னாலேயே 2000 அடி கொண்ட சிலையை எழுப்பினான்.

பல வருஷங்கள் சென்றன. வனத்தில் இந்தப் பொற் சிலை மறைந்துவிட்டது. அநேக வருஷங்களுக்குப் பிறகு சாமுண்டி ராஜா என்ற ஒருவர் அந்த ராஜ்யத்திற்கு மந்திரியாக வந்தார், அவர் தாயாரான கல்லாலதேவி என்பவள் இந்தப் பொற்சிலையைப்பற்றி புத்தகங்களில் படித்தறிந்தவாராயிருந்தாள்.

ஒருநாள், 'இச்சிலையைக் கண்ணால் கண்டபிறகே. உணவோ, நீரோ அருந்துவேன்' என்று விரதமெடுத்துக் கொண்டாள்.

சாமுண்டி ராயர், ஒரு சைன்யத்தையும், தன் தாயாரையும் அழைத்துக்கொண்டு இந்தச் சிலையைத்தேடுவதில் முனைந்தார். அநேக நாட்கள் தேடியலைந்தும் கோமதேஸ்வரரின் சிலை காணவில்லை. ஒரு நாள் மாலையில் சரவணபெலகோலா என்ற கிராமத்தில் தங்கியிருக்கும் போது, சாமுண்டிராயர் இரவிலே ஒரு கனவு கண்டார், அந்தக் கிராமத்தில் சிலை இருப்பதாகவும், ஆனால் 'சுத்திகள்' செய்யப்பட்ட பின்னரே சிலையைக் கண்ணால் பார்க்க வேண்டும் என்பதே இக்கனவு.

கனவில் தோன்றியவர் சாமுண்டிராயரிடம் விந்தியகிரியின் உச்சியை நோக்கி ஒரு அம்பையும் எய்யச்சொல்லி விட்டு மறைந்தார்.

மறுநாள் காலையில் கனவில்கண்ட கட்டளைப்பிரகாரம் சாமுண்டிராயர் விந்தியாகிரியின் உச்சியை நோக்கி அம்பெய்தார், அம்புபட்ட இடத்தில் பாறை பிளவுபட்டு கோமதேஸ் வரர் தலை தெரிந்தது. சுத்தியால் அந்தப் பாறையில் அடித்ததும் மேற்பாகத்திலிருந்து கற்கள்கீழே விழுந்தன. கோமதேஸ்வரரின் பூராவடிவமும் தெரியலாயிற்று!

சுத்தி செய்வதற்குப் பிரமாதமான ஏற்பாடுகளைச் சாமுண்டிராயர் செய்தார்.

சுத்திசெய்வதற்கான அபிஷேகப் பொருள்கள் எவ்வளவு ஊற்றப்பட்டாலும் கோமதேஸ்வரரின் அரைக்குக் கீழே போகாததை கண்டு எல்லோரும் பிரமித்துப் போயினர். அப்போது தான் பூஜாரிக்குகோமதேஸ்வரரின் பக்தையான கிழவி ஒருத்திக்குத்தான் செய்த தீங்கைப் பற்றி நினைவு வந்தது;

அவளுக்கு கோமதேஸ்வரரின் பாதங்களில் அபிஷேகம் செய்ய அனுமதி கொடுக்கவில்லை. உடனே அவளையும் அழைத்து கோமதேஸ்வரரின் தலைக்குப் பாலை ஊற்றி அபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்தனர்.

அவள் தன் வீட்டிலிருந்து சிறிய பாத்திரத்தில் கொண்டுவந்த பாலை கோமதேஸ்வரரின் தலையில் ஊற்றியதும் மந்திரி குடும்பத்தார் அபிஷேகம் செய்த பாலெல்லாம் ஆறுபோல் பிரவாகம் எடுத்து பாதங்களில் வழிந்தது! அப்போது ஏற்பட்ட வியப்பில் கிழவி மறைந்து விட்டாள்.

அந்த ஊர் ராஜா, கிழவிக்கும் ஒரு சிலையை நிர்மாணிக்கும்படி கட்டளையிட்டார்! இன்றைக்கும் கோமதேஸ்வரரின் பாதங்களை நோக்கி பக்தியுடன் பஜனைசெய்யும் தோற்றத்துடனிருக்கும் கிழவியின் சிலையையும் காணலாம்.

கோமதேஸ்வரருக்கு பன்னிரண்டு வருஷங்களுக்கொருமுறை நடக்கும் மஹாமஸ்தாபிஷேகம் தான் ஜைன மதத்தார்களுக்கே பெரிய திருவிழா ஆகும்.

1952-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் நடைபெற்ற இந்த வைபவத்திற்கு ஐந்து லக்ஷம் ஜைனர்கள் சரவணபெலகோலாவில் கூடினர்.

இந்த மகாமஸ்தர்பிஷேகம் மிகவும் விசேஷமான ஒரு காட்சியாகும்! 57 அடி உயரமான சிலைக்கு அபிஷேகம் செய்வதென்பது சாமான்யமான காரியமல்ல! திருவிழா ஆரம்பமாவதற்கு அநேக மாதங்கள் முன்பிருந்தே ஜைனப் புரோகிதர்கள் சிலையின் உச்சியை அடைவதற்கு நான்கு பக்கங்களிலும் மூங்கிலால் மேடை கட்டுவார்கள்.

இந்த மேடைகளின் மீது, ஆயிரக்கணக்கான ஜைன பக்தர்களும், பூஜாரிகளும் பதினைந்துவித அபிஷேகம் செய்வார்கள். அபிஷேகத்தன்று காலையில் கோமதேஸ்வரரின் சிலைக்கு முன்பு நெல்லை இறைப்பார்கள். இறைத்த நெல்லின் மீது ஆயிரம் மண் கலசங்களில் சுத்த ஜலத்தை வைத்துமாயிலைகளையும் தேங்காய்களையும் வைத்திருப்பார்கள்.

மேடைமீது புரோகிதர்கள் மண் பானைகளில் பாலும், நெய்யும் வைத்துக்கொண்டு தயாராயிருப்பார்கள், மந்திர கோஷங்களுக்குப் பிறகுப் பாலையும், நெய்யையும் அபிஷேகம் செய்வார்கள்.

பால், நெய், அபிஷேகத்திற்குப் பிறகு, வாழைப்பழங்கள், வெல்லம், தயிர், சந்தனம், ஸ்வர்ணபுஷ்பம், வெள்ளி புஷ்பம், தங்க நாணயங்கள், வெள்ளி நாணயங்கள், வைரக் கற்கள் முதலான பொருள்களையும் அபிஷேகம செய்வார்கள்.

லக்ஷக்கணக்காய் கூடியுள்ள பக்தர்கள் பரவசமடைந்து பக்தியுடன் கோமதேஸ்வரரின் நாம சங்கீர்த்தனத்தில் ஈடுபடுவார்கள்.

இந்த கம்பீரமான சிலையை நோக்கும்பொழுதும் இதை செய்து முடிப்பதற்கு அந்த சிற்பிக்குவேண்டியிருந்த திறமையையும், பொறுமையையும் பற்றி யோசனை செய்யும்

போதும் நாமே உணர்விழுந்து கல்லாய் சமைந்துவிட்டது போல் தோன்றுகிறது.

கோமதேஸ்வரர் வடக்குதிக்குநோக்கி வீற்றிருக்கிருர். பத்து நூற்றுண்டாக அவர் புதுமை தோற்றத்துடனிருக்கும் காரணம் பன்னிரண்டு வருஷங்களுக்கொரு முறை அவர்மீது அபிஷேகம் செய்யப்படும் பொருள்சள் தான் என்று கூறுகின்றனர்.

சரவணபெலகோலா சுற்று வட்டாரத்தில் அடியெடுத்தும் வைக்கும் மனிதனுக்குத் தான் ஓர் எறும்புக்குச் சமானம் என்ற திகில் ஏற்படுகிறது.

பாற்கடல் போல் அழகும் தேனைப் போன்ற இனிப்பும் மரகதம் போன்ற பசுமையும் வாய்ந்தது சரவணபெலகோலா.

———

மிருக பலத்தைவிட அன்பானது இன்னும் பெரிய தீவிரமான சக்தியாகும். ஸத்தியம் அன்பு, தெய்வம் இவைகளிடத்தில் எனக்கு அளவு கடந்த நம்பிக்கையுண்டு. இந்த நம்பிக்கை எல்லோருக்கும் இருக்கலாகாதா?

★

“சரீர பலஹீனத்திலிருந்து விடுபடுவது கஷ்டம். ஆனல் ஒருவனுடைய ஆத்ம சக்தியைக் கொண்டு உலகத்தையே எதிர்த்து நிற்கமுடியும்”

நம் நாட்டு மன்னர்கள் அழிவைப் பற்றி வெளிநாடுகளில் உலவும் பிரஸ்தாபங்களுக்கு ஓர் உதாரணம்.

நடன மாதர்களால் கெட்டார்கள் நம் நாட்டு மன்னர்கள்

●

அரசனாக அவதரிப்பது சாமன்யமானதல்ல. ஞானம் வைராக்கியம், யஸஸ், அஷ்ட ஐசுவரியம், வீரியம், லக்ஷ்மீ' கரம் முதலிய பிரபுத்துவ மகிமையோடு கூடிய குணங்கள் அமைந்தவர்கள் தான் அரசர்கள்.

அரியபெரிய தவததைச் செய்தவர்கள் தான் அரசர் களாய் அவதரிக்கிறார்களென சாஸ்திரங்கள் கூறுகின்றன. படைத்தல்,காத்தல், அருளல் ஆகியகடவுளின் பஞ்சகிருத் தியங்களில் ஒன்றாகிய காத்தல் தொழிலை மன்னர்கள் செய் வதால் அவர்கள் தெய்வீகத்தன்மை பொருந்தியவர்க ளென்றும் மக்களை ஆக்கினை செய்வது அவர்களது தெய் வீகஉரிமையென்றும், ,DIVINE RIGHT OF KINGS' சாஸ்திரீ யமானநம்பிக்கை நிலவிவந்தது.பிரஜைகளும் ராஜபக்தியை தெய்வபக்திக்கொப்பாகக் கருதி வந்தனர். சுருங்கக்கூறின் ஆதிகாலத்தில் அரசர்களே தெய்வப் பிரதிநிதியாக இருந்து வந்தார்கள்.

அவர்களிடம் அநேக தெய்வ சக்திகள் குடிகொண்டி ருந்ததாகவும் நாம் சரித்திரவாயிலாக அறிகிறோம். அத்த

கைய தெய்வீகத்தன்மை பொருந்திய அரசர்கள் ஆண்டு வந்த பழங்காலத்தில் பிரஜைகளும் பசி, பிணி, துன்பங்கள் இல்லாமல் வெகு சுபிட்சமாக வாழ்ந்து வந்தார்கள்:

இத்தகைய உன்னத மகிமை பொருந்திய மன்னர்களின் பின் சந்ததியார் இருந்தஇடம் தெரியாமல்‘அழிந்து போயய விட்டார்கள்.

பின் வந்த இந்த மன்னர்களின் அழிவுக்குக்காரணம் என்னவென்பதை நாம் கவனிப்போம். காலத்திற்கேற்றவாறு. தங்களைத் தாங்களே சீர்திருத்திக்கொள்ளும் மனப்பான்மை இவாகளிடம் இல்லாமல் போய்விட்டது.

ரோமாபுரி எரிந்துகொண்டிருக்கும்போது நீரோ அரசன் பிடில் வாசித்துக்கொண்டிருந்தமாதிரி, மன்னர்களுக்கு மக்களிடம் அக்கறை யில்லாமலும், ஆளும் திறமையுமில்லாமற் போய்விட்டது. அவர்கள் அரசர்களாக தோன்றியதற்குக் காரணம் உண்டு, உடுத்தி, இன்பமாவதற்கே என்று கருதிவந்தனர். ‘இந்திரன் கெட்டதும் பெண்ணாலே சந்திரன் கெட்டதும் பெண்ணாலே’ என்ற பழமொழிப்படி மன்னர்களும் அழிவுற்றனர்.

ஒரு பெரிய யுத்த வீரனையும், சிறந்த சேனைத் தலைவனையும் பெரிய மஹா ராஜாவையும் கௌரவிப்பதைக் காட்டிலும் சிறந்த ஆத்ம ஞானியான மகானைக் கௌரவிப்பதே இந்திய மக்களின் பண்பாடாகும். ‘துறவிக்கு வேந்தன் துரும்பு தானே!

புராதன காலத்தில் மன்னர்களது ராஜ சபையிலே பிரம்மஞானியான ஒரு ராஜகுரு வீற்றிருப்பார். சிறந்த கலைஞர்களும், சாஸ்திர விற்பன்னர்களும், மதியூக மந்திரிகளும் வீற்றிருப்பார்கள். ராஜ சபையே தெய்வீகம் பொருந்தியிருக்கும். ஆனல், பின்வந்துள்ள மஹாராஜாக்கள் சபைகளிலோ மதுபானங்கள் அருந்துவதும்

வெண்சாமரங்கள் வீசுவது முதலான சிஷ்ருஷைகளுக்குப் பெண்களை ஏராளமாக வைத்துக்கொள்வது முதலிய தீய பழக்கங்கள் மலிருந்திருந்தன.

நாடக கன்னிகைகளும் நடன மாதர்களும்ஏராளமாகக் குழுமியிருப்பார்கள். குடி, கூத்து, கும்மாளம் இவைதான் ராஜ சபையின் பிரதான அம்சங்களாயிருக்கும். மஹா ராஜாக்கள் சதா மதுமயக்கத்தில் மூழ்கி யிருந்தார்கள். மேற்கூறிய தாசிகளே இவர்கள் அழிவிற்கு மூலகாரண மாக இருந்து வந்தனர்.

இவ்வாறு இந்திய ராஜாக்கள் நிர்வாகத் திறமை யற்று அதிஉல்லாசக் கேளிக்கைகளுக்கும் செலவிற்கும் ராஜாங்க கஜானுவை சூறையாடி. கடனாளியாகத் தவிப்ப தற்குக் காரணம் தாசிகள்தான் என்று 'Montrealer' என்ற அமெரிக்க பத்திரிகையில் கீழ்க்கண்டவாறு தகவல்கள் வெளிவந்துள்ளன.

'சாதாரணமாய் இந்திய ராஜாக்களைபற்றி அவர்கள் பொக்கிஷங்கள் பற்றியும் ஏராளமான செல்வங்கள்' விலை உயர்ந்தபொன், வைரஆபரணங்களைப்பற்றியும் செய்திகள் வெளியாவதுண்டு. ஆனுல் உண்மையில் இந்த ராஜாக் களின் கஜானுக்கள் எப்போதும் காலிதான்.

ராஜாக்கள் குடிகளிடம் வரியோ, கிஸ்தியோ வசூலிப் பதில் ஒன்றும் குறைவில்லை. பின் ஏன் இவர்களுக்கு இந்தப் பணத்திண்டாட்டம்?

ராஜாக்களின் நாசத்திற்குக்காரணம் அந்த மேனி மினுக்கினுலும் பகட்டினுலும் எவரையும் மயக்கிவிடும் தாசி களே. இந்தியாவில் இவர்கள் கொட்டம் சமாளிக்க முடி யாததென்று கூறலாம்.

அநேகமாக இவர்கள் எல்லா ராஜாக்களின் ரத்தத் தையே சுண்டிவிட்டார்களென்றே கூறலாம். ராஜாக்களை

வலையில் விழச்செய்து ராஜ்யத்தைச் சேர்ந்த சொத்து: சுதந்திரங்களை அடமானம் வைக்கவும் செய்து, பல லேவா தேவிகாரர்களை கொழுத்த செல்வந்தர்களாக்கி யிருக்கின் றனர் இவர்கள்.

மன்னர்களை மயக்கி பிறகு படுகுழியில் தள்ளும் இந்த தாசிகள் ஒழுக்கம், மதம், கட்டுப்பாடான வாழ்க்கையின்றி ஒதுக்கப்பட்டுவந்த, ஒரு நாட்டியம் என்ற பேரால் தங்கள் அங்க நெளிவுகளைக் காண்பித்து காம உணர்ச்சியைத் தூண்டும் ஒரு கூட்டத்தாரிடையே பிறந்தவர்கள் தான்.

வாலிபமும் வனப்பமும் மிகுந்த தேகக்கட்டுடன் பதி னைந்தாம்வயதிலேயே தன்னுடைய காமாந்தகாரக் கண் களை வீசி வசியஞ்செய்து விடுவாள் இந்த தாசிகுல மங்கை.

இவளுக்கு கல்வி அறிவு ஒன்றும் இருக்கத் தேவை யில்லை.

இவள் வலையில் விழுந்த அரசன் விழுந்தவன் தான். இவள் இழுத்தகோட்டைத் தாண்ட முடியாதவனாகிறான். மன்னன். பிறகு கேட்பானேன்?

ராஜாங்க பொக்கிஷம் இவள் கைவசம் வந்தவுடன் மன்னன் நாட்டைவிட்டு ஒடவேண்டியதுதான். இவள் சம் பாதித்த சொத்துக்கள் இவளையும் இவளை வளர்க்கும் போஷகர்களையும் சேருகிறது.

நாட்டிலெங்காவது அழகான தாஸிப் பெண் இருக் கிறாள் என்று கேள்விப்பட்டால் போதும் இவளைத், தன் 'ராணி'யாக்கிக் கொள்வதில் 'நான்' நீ என்று போட்டி வந்துவிடும் இந்த ராஜாக்களுக்குள்ளே.

எப்படியாவது முயற்சிகள் செய்து அளவற்ற பொருள் களைக்கொட்டி இவர்களின் அந்தப்புரத்தை அலங்கரிப்ப தற்கு இந்தப் பெண்ணை கொண்டுவந்து விடுவார்கள்.

அந்தப்புரத்துக்கு ராணியானபின் ராஜா இவளுடன் அடிக்கடி ஐரோப்பிய தேசங்களுக்கு உல்லாசப்பிரயாணம் செய்வார். நாடும் மக்களும் எப்படிப் போனுலென்ன?

பஞ்சத்தினுல் ஏற்படும் பரிதாபத்தைவிட மிகக் கொடியது ஒரு இந்திய மகாராஜாவிற்கு ஒரு நாட்டிய மங்கையினுல் ஏற்பட்ட கதி.

இந்த நாட்டிய மங்கைகள் ஒரு ராஜா அழிந்தவுடன் ஒரு புஷ்பத்தைவிட்டு மற்ருெரு புஷ்பத்திற்குத் தாவும் வண்டுபோல் மற்ருெருராஜாவையோ, வேறுபிரபுவையோ உறிஞ்சப் புறப்பட்டுவிடுவார்கள்.

பொதுவாக இந்த நாட்டிய மாதர்கள் குழந்தைப் பிராயத்திலே யிருந்தே ஆடவர்கள் எதில் மோகமாயுள்ளனர் அவர்களை எப்படிக் கவர்ச்சி செய்யலாமென்பதில் கைதேர்ந்தவர்களாகி ராஜாங்கத்தையே கவிழ்த்து ராஜாக்களையே அழித்துவிடும் நாசகாரிகளாக இருந்திருக்கிருர்கள்!

——

இரு குதிரைகள்!

கோபம் - சாந்தம் என்பன இரண்டு குதிரைகள். கோபமென்னும் குதிரைமேல் ஏறிக்கொண்டால் குதிரை போன வழிதான் போகவேண்டும். கடிவாளமாகிற அறிவு பயன்படாது. அது எவ்விதமும் அறுந்துபோகும். கோபக்காரனுக்குப் புத்தி சூன்யமே அதிகம். திடீரென்று கோபக் குதிரை எந்தப் பாவப் படுகுழியிலேனும் தள்ளி மிதித்துவிடும். சாந்தமென்னும் அசுவம் அப்படியல்ல. நமக்கு அடங்கி யிருக்கும். அதை அறிவென்னும் கடிவாளத்தால் இழுத்துப் பிடித்து நடத்தலாம் — ஆபத்து நேராது. குதிரை சவாரி செய்வோர் எதை விரும்புவர்? சாந்த குணபாவமுள்ள அசுவத்தைத்தானே!

பண்டிகைகளால் கலைகள் அபிவிருத்தியடைகின்றன

●

இந்தியாவில் பண்டிகைகளும் திருவிழாக்களும் இல்லாத இடமே கிடையாது. இமயம் முதல் குமரி வரையிலும் மேற்கே சமுத்திரத்திலிருந்து அஸ்ஸாம் வரையிலும் எங்கே சென்றாலும் காலத்திற்குத் தகுந்த பண்டிகைகளும் திருவிழாக்களும் கொண்டாடும் பழக்கங்களிருக்கின்றன. பண்டிகைகளும் திருவிழாக்களும் மக்களுக்குக் குதூகலமளிப்பதல்லாமல் அவர்களுடைய லளித கலைகளுக்கும் கலைப் பொருள்களுக்கும் ஊட்டம் கொடுக்கின்றன.

திருவிழாவின்போது நடக்கும் கிராமிய நடனங்களும் கிராமியப் பாடல்களும் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு பண்டிகை—திருவிழாவின் போதும் ஆண்டவனின் பல்வேறு மகிமை கொண்டாடப் படுகிறது.

இந்தமாதிரித் திருவிழாவின்போது மக்கள் பழைய இதிஹாசப் புராணங்களின் பிரபாவங்களில் திளைக்கின்றனர். இன்னும் இந்தத் திருவிழாக்கள் நமது சக்தி வாய்ந்த தேசிய வாழ்க்கைக்கு முக்கியத்துவம் அளிக்கக் கூடிய பல அம்சங்கள் கொண்டதாயுள்ளன.

இம்மாதிரி விழாக்களின்போது நாட்டின் பல்வேறு ரக மனிதர்களும் ஒன்றுகூடி விழாக்களில் கலந்து

கொண்டு குதூகலமாய் தங்கள் பாரம்பரிய சிறப்பையும் மகிழ்ச்சியையும் ஓங்கச் செய்ய முடிகிறது.

வம்சபாரம்பரையாய் செழிப்புற்று வந்துள்ள கலை சம்பந்தமான சிருஷ்டி ்கள் யாவும் ஒரு முகமாக ஐக்கியமாவதற்கு இந்தத் திருவிழாக் காலங்கள்தானே தகுதியாகின்றது.

திருவிழாக்களும் பண்டிகைகளும்தான் நாட்டின் கலாசாரங்களையும் பரம்பரையான கலைச் செல்வங்களையும் பாதுகாத்து செழிப்புற்று ஓங்குவதற்கு காரணமா யிருக்கிறது

திருவிழாக்களின்போது நாட்டின் பற்பல பாகங்களிலிருந்தும் கூடும் மக்களால் பல பிரதேசங்களுக்கும் ஒரு ஐக்கியமான தொடர்பு ஏற்படுகிறது.

அநேகமாக எல்லாத் திருவிழாக்களும் பூமி செழிப்புறுவதற்கும் மக்கள் சுபிட்சமாக வாழ்வதற்கும் கொண்டாடப்படுவதால் இவை மக்களின் அன்பு உணர்ச்சிக்கும் அடிகோலுகிறது.

திருவிழாக் காலங்களில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் சுதேசித் தயாரிப்பான விதவிதமான ஜரிகை வேலை செய்த பட்டு, பட்டாடைகள், கலை அழகு மிகுந்த பொம்மைகள், சித்திரவேலைப்பாடமைந்த மண் பாண்டங்கள் வீதிகளிலெல்லாம் குவிந்து நாட்டின் கலைத் திறனுக்குச் சாட்சியாக விளங்குகின்றன. கோஷ்டி கானங்களுக்கும் நாட்டிய நடனங்களுக்கும் குறைவில்லை. இவ்வாறாக நாட்டின் பல்வேறு கலைப் பொக்கிஷங்களுக்கும் திருவிழாக்கள் தர்மகர்த்தாக்களாக விளங்குகின்றன.

தீபாவளி, கார்த்திகை தீபம், பொங்கல், கிருஷ்ண ஜயந்தி, ராம நவமி, ஸரஸ்வதி பூஜை, நவராத்திரிப் பண்டிகை ஹோலிப் பண்டிகை முதலான பண்டிகைகளை மக்கள் கோலாகலத்துடன் ஆட்டபாட்டங்களில் கலந்து

குதூகலத்துடனும் உற்சாகத்துடனும் கொண்டாடுகின்றனர். கிருஹலக்ஷ்மிகள் புத்தாடைகளணிந்து தங்கள் வீடுகளை அழகு பெறச் செய்து திருக்கோலங்களிட்டு தீபங்கள் ஏற்றி வைத்து மக்கள், சுற்றத்தாருடன் விருந்துண்டு களிப்பெய்துவது வழக்கமாயிருந்து வருவது நமது இந்தியப் பண்பாட்டின் அழியாத சின்னமன்றோ?

தீபாவளிப் பண்டிகை புத்தாண்டாகக் கொண்டாடும் வட இந்தியாவில் பெண்மணிகள் பலரகப் பட்டாடைகள் அணிந்து விதவிதமான தலையலங்காரங்களோடு அழகான பூக்கூடைகளில் விதவிதமான நறுமண மலர்களேந்தி வீதிகள்தோறும் ப்வணி வருவது ரம்மியமான காட்சியாயிருக்கும்.

வங்காளம், ஹிமாசலப் பிரதேசம், ராஜஸ்தானம் முதலிய இடங்களில் திருவிழாக் காலங்களில் சென்று பார்த்தால் பிரத்தியேக ஜரிகை, எம்பிராய்டரி வேலைப் பாடமைந்த ஆடை அலங்காரங்கள் விசேஷமா யிருக்கும். திருவிழாக்களுக்கும் இந்த ஆடை அலங்காரங்களுக்கும் ஒரு தனி ஐக்கியமுண்டு.

திருவிழாக்கள் நடக்கும்பொழுது அவைகளை ஒட்டி கூடும் சந்தைகளில் நானுவித கலைப் பொருள்கள், கண்ணுடிச சாமான்கள், பெண்மணிகளின் அலங்கார சாதனங்கள் முதலியன ஏராளமாகக் குவிந்து ஒரு கண்காட்சி போல் விளங்குகின்றன.

மலையாளத்தில் மஹாபலி சக்கரவர்த்தியின் ஞாபகமாகக் கொண்டாடப்படும் "ஓணம்" திருவிழாவை மலையாளப் பிரதேசவாசிகள் பெரும் வைபவமாகக் கொண்டாடுகின்றனர். அப் பண்டிகையின்போது இவர்கள் கேளிக்கைகளும் விருந்துகளும் விசேஷமானவை. மற்ருெரு பண்டிகையான புது வருஷ ஆரம்ப புண்ணிய தினத்தின் முதல்நாளி